செ.வெ.எண்: 338 18/4/10

செய்தி வெளியீடு – 18 .4.2010

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றில் மூழ்கி உயிரிழந்த மூன்று பேரின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மூன்று இலட்சம் ரூபாய் நிவாரண உதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மேலஅம்பாசமுத்திரம் கிராமத்தில் தாமிரபரணி ஆறு ரயில்வே பாலத்தின் கீழ்ப்புறம் கடந்த 13.4.2010 அன்று ஆற்றில் குளிப்பதற்காகச் சென்ற திரு.நயினார் என்பவரின் 22 வயது மகன் நடராஜன், திரு.தட்சிணாமூர்த்தி என்பவரின் இரு மகன்கள் 20 வயதுள்ள முத்துக்குமார் மற்றும் 18 வயதுள்ள கருப்பையா ஆகிய மூவரும் தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டனர். இதுகுறித்த தகவல் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் மூலமாகத் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (18.4.2010) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9